வந்திடும் எங்கள் நலைநகர் திருமலை
ஆ. ஆ ஆ. ஆ.
இடிமின்னல் ஒடு புயல் மழை பெய்திடும்
ஆடிவானில் விடி வெள்ளி முகம் தந்திடும்
தெருவோரம் மீதெங்கள் உயிர் போவதோ 2
எம் தமிழீழ திசையாவும் சிவப்பாவதோ

இனி இடிமின்னல் ஒடு புயல் மழை பெய்திடும்
ஆடிவானில் விடி வெள்ளி முகம் தந்திடும்

கோணமாமலை மீது துயர் மூண்டது
கொடியோரின் படைகள் அங்கு வந்தது
எரிகின்ற பெருந் தீயில் உடல் வெந்தது
உயிர் தின்னும் பேய்கள் நிலை கொண்டது

இனி இடிமின்னல் ஒடு புயல் மழை பெய்திடும்
ஆடிவானில் விடி வெள்ளி முகம் தந்திடும்

நாம் வாழ்ந்த நிலம் எங்கும் விச புற்றுக்கள்
நடமாட வழியில்லை முள் பற்ரைகள்
இசையோடு தமிழ் பாடும் ஒலி இல்லையே 2
விடிகாலை பொழுதங்கு இனிது இல்லையே

இனி இடிமின்னல் ஒடு புயல் மழை பெய்திடும்
ஆடிவானில் விடி வெள்ளி முகம் தந்திடும்

விழி சிந்தி நின்றோமே ஓர் விடை வந்ததோ
மொழி சொல்ல முடியாத பெருந்துயர் நின்றதோ
எழு வானில் திசை வாள எழுந்தாடுவோம் 2
பொழுதோடு மண் மீது கொடியேற்றுவோம்

இடிமின்னல் ஒடு புயல் மழை பெய்திடும்
ஆடிவானில் விடி வெள்ளி முகம் தந்திடும்
தெருவோரம் மீதெங்கள் உயிர் போவதோ 2
எம் தமிழீழ திசையாவும் சிவப்பாவதோ

இனி இடிமின்னல் ஒடு புயல் மழை பெய்திடும்
ஆடிவானில் விடி வெள்ளி முகம் தந்திடும்